Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 43

வியாழக்கிழமை
08 ஜனவரி 2026

மார்கழி 24ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் –11
விலை – ரூபா 50


## நாயாற்று பாலத்தின் புனரமைப்பு நிறைவு!

விரிவு பக்கம்:-09

டித்வாவை விட மோசமான வகையில்

# புதிய காற்றழுத்தத்தால் யாழில் பேரழிவு நேரும்!

பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை



**யாழ்ப்பாணம், ஜனவரி 8**

**வங்காள விரிகுடாவில் தற்போது உருவாகியுள்ள காற்றழுத்தம் காரணமாக, யாழ்ப்பாணம் இதுவரை இல்லாத வகையில் பெரும் அழிவுகளைச் சந்திக்கும் வாய்ப்புள்ளது - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.**

»11

### புயலுக்கு முன்னைய நிலையில் ஆழ்ந்த காற்றழுத்த மண்டலம்!

யாழ்ப்பாணம், ஜனவரி 8

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்குத் திசையில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று நள்ளிரவு வரையான அவதானத்தின்படி, 'ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக' வலுப்பெற்றதுடன், புயலுக்கு முன்னைய நிலையை அடைந்தது.

தற்போது வரை இந்தக் காற்றழுத்த

»11

## சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இலங்கைக்கு வருகை



கொழும்பு, ஜன. 8

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

வல்லாதிக்க நாடுகளின் முக்கியஸ்தர்கள் இலங்கைக்கு வருகை

»11

### ஜனாதிபதி செயலகத்தில் நாளை சேர்.பொன்.அருணாசலம் நினைவு!

கொழும்பு, டிசெ. 8

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலும், இலங்கையின் அரசியல் மறுமலர்ச்சியிலும் மிகமுக்கியமான ஆளுமையும், கொடையாளருமான சேர்.பொன். அருணாசலத்தின் 102ஆவது நினைவுதினம் நாளை

»11



வவுனியாவில்

### வாகனங்களின் தரம் தொடர்பில் நேற்று விசேட பரிசோதனைகள்!

பொலிஸார் அதிரடி நடவடிக்கை

வவுனியா, ஜன. 8

வவுனியாவில் பேருந்துகள் மற்றும் ஓட்டோக்களின் தரம் தொடர்பில் நேற்று திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பத்துக்கும் மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா

»11

### ஜனவரி 16ஆம் திகதியுடன் விடைபெறுகிறார் ஜூலி சங்

கொழும்பு, ஜன. 8

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நீண்டகாலம் பணியாற்றிய ஜூலி சங், எதிர்வரும் 16ஆம் திகதியுடன் விடைபெறவுள்ளார் என்று அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு இலங்கைக்கான அமெரிக்

»11

பருத்தித்துறையில்

### 25 வீதமான இடங்களில் டெங்கு பரவும் ஏதுநிலை

யாழ்ப்பாணம், ஜன. 8

பருத்தித்துறையின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின்போது, 25 வீதமான இடங்களில் டெங்குக்கு ஏதுநிலை அவதானிக்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பொது நிர்வாக,

»11

### பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



கொழும்பு, ஜன. 8

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நாட்டின் கல்விக் கட்ட

»11



முச்சந்தி முரளி

"முழங்காலளவு வெள்ளத்துக்கு நிவாரணம் எடுத்தவைக்கு இயற்கை பாடம் படிப்பிக்க நினைக்குது போல"

## ஈஸ்டர் தாக்குதல்தாரி புலஸ்தினி உயிருடன்!

தகவல்கள் கிடைத்துள்ளன என்று அமைச்சர் ஆனந்த விஜேபால தகவல்



கொழும்பு, ஜன. 8

ஈஸ்டர் தாக்குதல்தாரிகளில் ஒருவரான சாரா ஜஸ்மின் (புலஸ்தினி) உயிருடன் உள்ளார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில், உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்

»11

நாடாளுமன்ற உறுப்பினர்களின்

### ஓய்வூதியத்தை ரத்தாக்கும் சட்டவரைவு முன்வைப்பு!

கொழும்பு, ஜன. 8

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ரத்துச் செய்வதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்வைக்கப்பட்டுள்ளது. '1977ஆம் ஆண்டின் நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குவதற்கு

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 07.01.2026 | திகதி 07.01.2026 | திகதி 07.01.2026 | திகதி 07.01.2026 | திகதி 07.01.2026 | திகதி 07.01.2026 | திகதி 07.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4309 | சீட்டிழுப்பு இலக்கம் 1376 | சீட்டிழுப்பு இலக்கம் 0335 | சீட்டிழுப்பு இலக்கம் 2415 | சீட்டிழுப்பு இலக்கம் 6067 | சீட்டிழுப்பு இலக்கம் 2097 | சீட்டிழுப்பு இலக்கம் 0183 |
| ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கினம் கும்பம் | ஆங்கில எழுத்து O | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கினம் தனு |
| வெற்றி இலக்கங்கள் 13 32 36 76 | வெற்றி இலக்கங்கள் 26 34 50 62 | வெற்றி இலக்கங்கள் 2 7 8 0 | சுப்பர் இலக்கம் 14 | வெற்றி இலக்கங்கள் 3 0 9 7 1 6 | வெற்றி இலக்கங்கள் 06 09 34 64 | வெற்றி இலக்கங்கள் 13 23 65 |
| விசேட எழுத்து U | | | வெற்றி இலக்கங்கள் 18 26 38 58 | | விசேட எழுத்து U | |

# பாடநூலில் ஏற்பட்டுள்ள தவறுக்கும் மறுசீரமைப்புக்கும் தொடர்பில்லை

## மக்களைக் குழப்பவேண்டாம் என கல்வி அமைச்சர் வலியுறுத்து

**கொழும்பு, ஜன.8**

**தரம் 6 பாடநூலில் ஏற்பட்ட தவறு தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன. அதன் முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படும். இந்த விடயத்தை முன்னிலைப்படுத்தி கல்விச் சீரமைப்புத் தொடர்பாகத் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தவேண்டாம் என்று கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆறாம் தர ஆங்கிலப் பாடத்தின் ஒரு தொகுதியில் சேர்க்கப்பட்ட சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பாகப் பேசப்படுகிறது. தேசிய கல்வி நிறுவனம் பிறிதொரு சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சால் அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியாது. நிறுவனத்தின் ஆணைக்குழு ஊடாக இந்தப் பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராயப்படுகிறது.

எதையும் மறைக்கவேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. இடம்பெற்ற தவறு தொடர்பில் முறையாக விசாரிக்கப்படுகிறது. யார் தவறு இழைத்தது, அதன் நோக்கம் என்ன என்பதும் விசாரணைகளின் பின்னர் பகிரங்கப்படுத்தப்படும். இந்தப் பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவில்லை. தவறான அச்சத்தையும், நிலைப்பாட்டையும் தோற்றுவிக்கவேண்டாம்.

இந்த விடயத்தை முன்னிலைப் படுத்திப் புதிய கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தவேண்டாம்-என்றார். (எ-இ)

# பாடநூலில் ஏற்பட்ட தவறு நிதிமோசடி இல்லையா?

## நாமல் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜன.8

பாடப்புத்தகத்தில் முறையற்ற விடயம் ஒன்று அச்சிடப்பட்டதை அடுத்து, சர்ச்சைக்குரிய அந்த விடயத்தை நீக்குவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. இது அரச நிதி முறைகேடு இல்லையா? இதற்கு யார் பொறுப்புக்கூறுவது? என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை, நாட்டின் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்ததால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்ட நிவாரணங்கள் இன்றளவில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

# எதிர்க்கட்சியில் சண்டியர் ஆளும்போது நொண்டியர்

## சாமர சம்பத் எம்.பி. கிண்டல்

கொழும்பு, ஜன.8

எதிர்க்கட்சியில் இருந்தபோது சண்ட்டியர்களாகச் செயற்பட்டவர்கள், அரசாங்கத்துக்கு வந்ததும் நொண்டியர்களாக மாறிவிட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கல்வி மறுசீரமைப்புக் குளறுபடியில் பிரதமருக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் அல்லது அவர் பதவி விலகவேண்டும்.

வெனிசுவேலா பிரச்சினை 2018ஆம் ஆண்டு காலத்தில் ஏற்பட்டபோது மக்கள் விடுதலை முன்னணியினர் அப்போது அமெரிக்கத் தூதரகத்தைச் சுற்றிவளைத்தனர். ஆனால் இப்போது அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக அவர்களின் வேறு தரப்பினரே சுற்றிவளைத்தனர். ஆளுங்கட்சியினர் எதிர்க்கட்சியில் இருந்தபோது சண்டியர்களாகவும், அரசாங்கத்தில் இருக்கும்போது நொண்டியர்களாகவும் மாறியுள்ளனர்-என்றார். (எ-இ)

# விமானநிலையத்தில் சிக்கிய ரூ.500 மில். பெறுமதியான குஷ்

கொழும்பு, ஜன.8

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சுமார் 500 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம்மூலம் இலங்கை வந்துள்ளனர். விமானநிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையின்போது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 50 கிலோகிராம் நிறையுடைய போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | வெற்றி வாரம் 0775 |
| ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 4 7 4 8 0 4 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 3041 | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 33 46 49 58 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 02 09 49 61 | வெற்றி வாரம் 5202 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | |
| வெற்றி வாரம் 0871 | வெற்றி இலக்கம் 12 37 39 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் 16 32 43 60 | சீட்டிழுப்பு வாரம் 4753 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து L | சுப்பர் இலக்கம் 27 | வெற்றி இலக்கம் 26 56 67 73 | வெற்றி வாரம் 2217 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 07.01.2026 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 10 17 28 72 | வெற்றி வாரம் 2867 |

### டித்வா புயல் தொடர்பான

# விசேட தெரிவுக்குழுவுக்கு எதிர்க்கட்சியின் தலைமை

## எதிர்க்கட்சிகளின் கொறடா கோரிக்கை



கொழும்பு, ஜன.8

டித்வா புயல் முன்னாயத்தம் இன்றி இருந்தமை தொடர்பாக ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு எதிர்க்கட்சி முன்மொழிந்த விசேட தெரிவுக்குழுவின் தலைமைத்துவத்தை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவின் அமைப்பை மாற்றவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்ததுடன், இந்தத் தெரிவுக்குழுவை நியமிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன்கூடிய எழுத்துமூலக் கோரிக்கை கடந்த மாதம் 18ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதுதொடர்பான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று சபாநாயகர் பதிலளித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உத்தேச மின்சாரக்கொள்கையின்படி

# வீதி விளக்குகளின் கட்டணம் பிரதேச மக்களின் தலையில்

## மின் பாவனையாளர் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.8**

**உத்தேச புதிய மின்சாரக் கொள்கையின் ஊடாக, பிரதேசத்தில் உள்ள வீதி விளக்குகளுக்கு ஏற்படும் செலவை அந்தப் பிரதேச மக்களின் மின்சாரக் கட்டணத்துடன் இணைத்து அறவிடுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று மின்பாவனையாளர் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் வீதி விளக்குகளின் 'வோட்' அளவைக் கணக்கிட்டு, அந்தத் தொகையை அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களிடையே பகிர்ந்து, அவர்களின் மின்சாரக் கட்டணத்துடன் இணைக்க முயற்சிக்கப்படுகிறது.

இவ்வாறு சேர்க்கப்படும் தொகை, பாவனையாளரின் மின்சாரக்கட்டணப் பெறுமதியில் 2.2 வீதத்துக்கு மேற்படாத ஒரு தொகையாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதி விளக்குகளைப் பராமரிக்கும் மற்றும் முகாமைத்துவம் செய்யும் அதிகாரம் தற்போது பிரதேசசபை, நகரசபை மற்றும் மாநகரசபைகள் வசமே உள்ளது. புதிய யோசனையின் ஊடாக இந்த அதிகாரத்தை உள்ளூராட்சிமன்றங்களிடமிருந்து நீக்கி, அதை நிர்வகிக்கத் தனியானதொரு நிறுவனத்தை உருவாக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது-என்றார். (எ-இ)

## தற்காலிக 'லைசென்ஸ்' கட்டணத்தில் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஜன.8

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் நிலையத்தில், வெளிநாட்டு சாரதி உரிமத்தின் அடிப்படையில் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணங்களைத் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விமான நிலைய வளாகத்தில் வழங்கப்படும் வசதிகளுக்கு, தற்போது அறவிடப்படும் 2 ஆயிரம் ரூபா கட்டணம் போதுமானதாக இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

காலத்துக்கேற்ப கட்டணங்களை இற்றைப்படுத்தி, கடந்த வருடம் நவம்பர் மாதம் 17ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானிமூலம் திருத்தப்பட்ட கட்டணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குவிதிகளைப் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)

## மத்திய வங்கி அதிகாரிகள் கரவெட்டியில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.8

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தால் சுயதொழில்முனைவோர்களை வலுவூட்டும் நோக்கில் நிதியியல் கல்வியறிவு தொடர்பான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 வரை இலவசமாக நடத்தப்படவுள்ளது.

உள்ளூர் தொழில்முயற்சியாளர்களுக்கு சரியான நிதிமுகாமைத்துவத்தின் அத்தியாவசியம் பற்றியும், நிதிமோசடி நிறுவனங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வது பற்றியும் சிறந்த அறிவூட்டலை வழங்கி தமது சுயதொழில் முயற்சியாண்மையில் நிலைபேறான வெற்றியை அடையச்செய்வதே இந்தக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

கருத்தரங்கில் மத்திய வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் வளவாளர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் சுயதொழில் முனைவோர் அன்றைய தினம் நேரடியாக கலந்துகொண்டு பயன்பெறமுடியும் என பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## ஆன்மிக, சமூகப் பணியாளர் போதகர் இராஜசூரியர் மறைவு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ். கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல ஆன்மிகத் தலைவரும் சமூகப் பணியாளருமான வண. கலாநிதி போதகர் சாம்சன் குலநாயகம் இராஜசூரியர் தனது 86ஆவது வயதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மறைந்துள்ளார்.

45 ஆண்டுகளுக்கும் மேலாக இறைபணி ஆற்றிய இவர், 'கியூமெடிக்கா' நிறுவனத்தின் ஊடாக சுனாமி காலப்பகுதியில் 1100 படகுகள் மற்றும் 1000 வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தவர். மேலும், வடமாகாணத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலைகளை நிறுவி கல்விப் புரட்சி செய்தவர்.

யாழ். தேவசபையின் தலைமைப் போதகராகவும், கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஐக்கியத்தின் தலைவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இவரது நல்லடக்க ஆராதனை, எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சந்தனம் மிஞ்சினால்...!

முந்தி சண்டைக்காலத்தில சைக்கிள் தான் எல்லாருக்கும் துணை. பெற்றோல், டீசல் இல்லாக் காலமெண்டதால(அப்ப அதுகளை தமிழாக்கள் உள்ள இடங்களுக்குக் கொண்டுவாறதுக்கு அரசாங்கம் தடை போட்டிருந்தது), மண்ணெண்ணெயில தான் காரோ, மோட்டர் சைக்கிளோ ஓடோணும். மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடுதான். அதால கடைக்கும் போனாலென்ன, காடு மேடு கடந்தாலென்ன எல்லாருக்கும், எல்லாத்துக்கும் சைக்கிள் தான் உதவி. அதால சைக்கிள் கடையளும் சந்திக்குச் சந்தி இருக்கும். உந்தச் சைக்கிள் கடையளில தகரத்திலையோ, இல்லாட்டி ரயரிலையோ 'இங்கு துவிச்சக்கரவண்டி திருத்திக் கொடுக்கப்படும்' எண்டு பெயின்றால எழுதிவைச்சிருப்பினம். ஆனால் அப்பிடி எழுதி வைச்சிருந்தும் ஒரு கடைக்குச் சனங்கள் எட்டியும் பாக்கேலை. காத்துப்போய், சைக்கிளை உருட்டிக் கொண்டு வாறவைகூட இந்தக் கடைப்பக்கம் ஒதுங்கினதில்லை. 'ஏன் ஒருத்தரும் என்ர கடைக்கு வாறேலை?' எண்டு அந்தச் சைக்கிள் கடையை வைச்சிருந்தவருக்கு ஒரே குழப்பம். பிறகு அவரின்ர சிநேகிதர் ஒருத்தர்தான் என்ன காரணமெண்டு கண்டுபிடிச்சார். வேற ஒண்டுமில்லை, 'திருத்திக் கொடுக்கப்படும்'எண்டதுக்குப் பதிலா 'திருத்திக் கெடுக்கப்படும்' எண்டு அவர் எழுதினதால தான் சனங்கள் அந்தக் கடைப்பக்கம் தலை வைச்சும் படுக்கேலை. அதைமாதிரி இப்ப சிலர் நல்லா இருந்த விசயங்களை திருத்திறம் எண்ட பேரில கெடுத்துக் கொண்டு இருக்கினம்.

பருத்தித்துறையில ஆனைவிழுந்தான் றோட்டைத் திருத்திறம் எண்டு கிட்டடியில அடிக்கல் நட்ட செய்தியை எல்லாரும் கேள்விப்பட்டிருப்பியள். ஒரு கிலோமீற்றர் நீளமான இந்த றோட்டை, 5 கோடி ரூபா செலவழிச்சு காப்பெற் றோட்டா மாத்தப்போயினம். றோட்டுகளைத் திருத்தி சனங்கள் நிம்மதியாப் போய் வரக்கூடியமாதிரிச் செய்யிறது நல்லதுதான். ஆனால், இந்த ஆனை விழுந்தான் றோட்டில காப்பெற் மட்டும் தான் இல்லையே தவிர, மற்றும்படி குறையொண்டும் பெரிசா இல்லாத, எல்லாரும் பிரச்சினை இல்லாமல் போய் வந்துகொண்டுதான் இருந்தவை, எங்கையாவது றோட்டுக்கரையில, அதுவும் இடைக்கிடை சின்னச் சின்ன சேதங்கள் இருந்ததே தவிர. ஒருநாளும் போக்குவரத்துக்கு அந்த றோட் இடைஞ்சலா இருக்கேலை. அப்பிடி சிவனே எண்டு நல்லாக்கிடந்த றோட்டைத்தான் இப்ப கிண்டிக்கிளறி, 5 கோடி ரூபா செலவில காப்பெற்றா மாத்திக்கொண்டிருக்கினம். சந்தம் மிஞ்சினவன் இடுப்பில தடவினமாதிரி, காசு மெத்திப் போய் நல்லா இருக்கிற றோட்டையும் இப்பிடி பழுதாக்கிப்போட்டு, பிறகு அதைத் தாங்களே திருத்துகினம் உந்தத் திசைகாட்டிக்காரர்.

அடிக்கல் நடுகிற அண்டைக்கும் ஒரு பம்பல். அடிக்கல் வைக்கவெண்டு திசைகாட்டி எம்.பி. ஒருத்தர் வந்து குத்துவிளக்கெல்லாம் கொளுத்திப்போட்டு, அடிக்கல் நடுகிற இடத்தைப் போய்ப் பார்த்திருக்கிறார். அங்க றோட்டு நல்லா இருந்திருக்குது. இப்பிடி நல்லா இருக்கிற றோட்டை கிண்டுறதுக்கு மனம் வராமல், பழுதடைஞ்சு கிடக்கிற இடத்தில போய் அடிக்கல்லை வைப்பம் எண்டு அங்கால ஏதும் குண்டும் குழியுமா இடம் இருக்கோ எண்டு தேடி இருக்கினம். றோட்டின்ர அரைவாசித் தூரம் தாண்டத்தான், அந்த றோட்டுக்கரையில லேசா குண்டும் குழியுமா ஒரு இடம் இருந்திருக்கு. அதால அங்கேயே அடிக்கல்லை நட்டிருக்கினம். குத்துவிளக்கு கொளுத்தினது ஒரு இடம், அடிக்கல் நட்டது வேற இடம். இப்பிடி நல்லா இருந்த றோட்டை 5 கோடி செலவழிச்சு திருத்திறதைவிட, ஆக்கள் போய்வரவே ஏலாமல் இருக்கிற றோட்டுகளைத் திருத்தினால் புண்ணியமாப் போகுமெல்லோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகுச்சேவை இடைநிறுத்தம்

யாழ். ஜன. 8

நயினாதீவு குறிகாட்டுவான் இடையிலான தனியார் படகுச் சேவை இன்று இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சீர்ற்ற காலநிலை காரணமாக வளிமண்டலத் திணைக்கள அறிவித்தலுக்கு அமையவே நயினாதீவு நயினாதீவு குறிகாட்டுவான் இடையிலான தனியார் படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டது என்று தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்த அறிவித்தலைப் பயணிகள் ஏற்றுக்கொண்டு அதன்படி பயண ஒழுங்குகளைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம66)

## ஓராண்டு சிரார்த்தமும் நினைவு தினமும்

மலர்வு 04 . 09 . 1983



மறைவு 20 . 12 . 2025

### அமரர் சிவஞானம் கபிலன்

(முன்னாள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - ஊர்காவற்துறை)

எங்கள் வீட்டு நாயகனை
செல்லமகள்களின் ஆருயிர் அப்பாவை
அருமை மகனை
பாசமிகு சகோதரனை
காரைநகர் மண்ணின் உரிமைத் தோழனை
திக்கரை முருகன் காலடியில் கலந்து
மாதம் பன்னிரண்டு ஆனதுவோ...
நினைவெல்லாம் நீங்களே கபிலா
என்றும் எங்களோடு இருப்பதாயே
நம் நாட்கள் நகர்கிறது
அனுபவித்து வாழ்ந்து போனீர்கள்
உங்கள் ஆசிர்வாதத்துடன்
ஆயுள் முழுவதும் இனி நாங்கள்

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 09 . 03 . 1939



விண்ணகம் 08 . 01 . 2025

### அமரர் அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை

(ஓய்வு நிலை தபாலதிபர்)

ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் காண்போமோ என ஏங்குது எம் நெஞ்சம்
கண்ணிமைக்கும் நேரத்தில் எமை விட்டுப் பிரிந்தீர்
கருணையின் வடிவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து வந்தீர்
இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ வழிகாட்டி வைத்தீர்
வையகத்தில் எமை விட்டுப் பிரிந்தாலும் தந்தையே
நெஞ்சகத்தில் உயிர் உள்ளவரை உமக்காய் வேண்டிடுவோம்
இறைவன் உங்களுக்கு அமைதி அளிப்பாராக

தொடர்புகளுக்கு: 071 636 3307, 021 222 3283

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 60401) E

# மரண அறிவித்தல்

## மார்கண்டு பாலசுப்பிரமணியம்

(முன்னாள் அக்கராயன் ப.நோ.கூ.சங்க முகாமையாளர், சமாதான நீதவான்)



சாவகச்சேரி, தனங்கிளப்பை பிறப்பிடமாகவும், மல்லாவி யோகபுரம், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்கண்டு பாலசுப்பிரமணியம் (முன்னாள் அக்கராயன் ப.நோ.கூ.சங்க முகாமையாளர், சமாதான நீதவான்) அவர்கள் நேற்று (07.01.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசூரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புச் சகோதரனும், பாலரூபினி (காயத்திரி ஹாட்வெயர் - காரைநகர்), ஐங்கரன் (நெதர்லாந்து), சசிஜகரன் (ஸ்கந்தபுரம்), சஜிதா (பரந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனராசா (இலங்கை மின்சாரசபை, வட்டுக்கோட்டை), டயாலினி (நெதர்லாந்து), ஜெசோ (ஸ்கந்தபுரம்), சீவகன் (ஸ்ரீலங்கா ரெலிகொம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜன், லிதுஜன், திபானுஜன், சுருதி, ஆதி, அஸ்வின், கம்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணகைபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 11.02.1962

மறைவு 07.01.2026

தகவல்:
ச.மோகனராசா ( மருமகன்)
077 728 3645

(CS/60402) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# இறைமைக்கு வந்த இழுக்கு...!

சர்வதேச நாடுகளின் தேவைக்கு ஏற்ப, இலங்கையின் தேசியக் கொள்கைகள் வகுக்கப்பட்டால், வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு நடந்ததே ஜனாதிபதி அநுரவுக்கும் நடக்கும் என எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மகனும், தற்போது 'தேசியப் பட்டியல்' நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச.மனித உரிமை மீற ல்கள், போதைப்பொருள் கடத்தல்கள், ஆபத்தான ஆயுதங்கள் சார்ந்த குற்றச்சாட்டில் மதுரோவைக் கைதுசெய்ததாக அமெரிக்கா கூறினாலும், இந்தக் கைது நடவடிக்கையின் பின்னால் உள்ள அரசியலைப் புரிந்து கொள்ளாத வர்கள் என உலகில் எவரும் இல்லை. டொலரைத் தவிர்த்துவிட்டு, சீனா, ரஷ்யா மற்றும் கியூபா உள்ளிட்ட நாடுகளின் சுதேச நாணயங்களில் வர்த்தகம் செய்தமையும், பிரிக்ஸ் கூட்டணியைப் பலப்படுத்தியமையும்தான் மதுரோ கைது செய்யப்படக் காரணம்.ஆயினும் 'மதுரோ குற்றவாளியாகவே இருந்தாலும், ஒரு நாட்டின் ஜனாதிபதியை ' மக்களின் தலைவரை, அந்த நாட்டின் இறைமையைச் சவாலுக்கு உட்படுத்தி 'பயங்கரவாதியைப் பிடிப்பது போல்' கைது செய்தமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். இவ்வாறிருக்கையில், 'மதுரோவுக்கு நடந்தது தான் ஜனாதிபதி அநுரவுக்கு நடக்கும்' என நாமல் ராஜபக்ச தெரிவித்திருப்பது அறமும், அடிப்படைப்புரிதலும் இல்லாத கூற்று.

மதுரோவின் விடயத்தில் அமெரிக்கா நடந்து கொண்ட விதம் தவறு என்று அமெரிக்கர்களே போராடிவருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது. உலக நாடுகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன. இவ்வாறிருக்கையில், நாமல் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள் சிந்தனை வறட்சியுடையவை மட்டுமல்ல, அரசியலுக்கு அப்பாற்பட்ட வன்மமும் வக்கிரமும் கொண்டவை. அந்தக் கருத்துகள் 'மஹிந்தவின் மகன்' என்பதைத் தவிர, ஓர் அரசியற் தலைவராக இருப்பதற்கு நாமலுக்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதையே வெளிப் படுத்துகின்றன.


ஒரு நாட்டின் தலைவரை - அவர் யாராக இருப்பினும், அந்த நாட்டின் இறைமையை நிலைகுலையச் செய்யும்வகையில் கைதுசெய்யக்கூடாது. அவர் சார்ந்த குற்றங்கள் அல்லது விவகாரங்கள் சர்வதேச நீதிமன்றத்திலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் அணுகப்படவேண்டுமே தவிர, தனிப்பட்ட நாடுகளின் சுதேச நீதிமன்றங்கள்மூலம் அணுகப்பட முடியாது. எனவே, நாமலின் கருத்துகள் அமெரிக்காவுக்குக் காட்டும் விசுவாசமா என்ற கேள்வி எழுவதும் தவிர்க்கப்படமுடியாததாக அமைகின்றது. உண்மையில் நாமலின் கருத்துகள் தேசியப் பிரச்சினை. நாட்டின் இறைமை, இராணுவம், மக்களின் தீர்ப்பு என அனைத்தையும் அவர் துச்சமாக்கியுள்ளார். எல்லாவற்றையும் விட, 'என்ன சொன்னாலும் மக்கள் (சிங்களவர்கள்) நம்புவார்கள், என்ற தோரணையை ராஜபக்சக்கள் இன்னமும் கைவிடவில்லை என்பதையும் நாமல் சொல்லாமல் சொல்லியுள்ளார்.



## பொய்யாமொழி

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

**பொருள்:** அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால், அறக்கடலாகவே விளங்கும் அந்தச் சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கேயன்றி, மற்றவர்களுக்குப் பிற துன்பக் கடல்களைக் கடப்பது என்பது எளிதான காரியமல்ல.



# உலக உணவுத்திட்டமூடாக திரிபோஷா உற்பத்தி




கொழும்பு,ஜன.8

**எமது நாட்டின் தேசிய போசாக்குப் பற்றிய பங்களிப்புகளின் ஒரு பகுதியாக திரிபோஷா வேலைத்திட்டத்தைக் கட்டியெழுப்புவதற்கு உலக உணவுத்திட்டம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.**

அதற்கமைய, திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோளத்தின் தரப்பண்பை அதிகரிப்பதற்கும், மற்றும் திரிபோஷா விநியோகத்தைப் பலப்படுத்துவதற்கும் உலக உணவுத்திட்டத்தின்மூலம் கருத்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப் பட்டுள்ளது.

ஒட்டுமொத்த கருத்திட்டத்துக்கு கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

2025 - 2029 காலப்பகுதியில் உத்தேசக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச)

# மட்டக்களப்புக்கு புதிய ரயில் சேவை

மட்டக்களப்பு.ஜன.8

'புலத்திசி' எனும் கடுகதி தொடருந்து 9 ஆம் திகதி முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்புக்கும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் தேவையைக் கருத்திற்கொண்டு இயக்கப்படும் இந்தத் தொடருந்து எதிர்காலத்தில் பயணிகளின் எண்ணிக்கையை பொறுத்து அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)

# ஜோன்ஸ்டனும் மகன்களும் சிறை மருத்துவமனையில்

கொழும்பு.ஜன.8

நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவர்களது இரண்டு மகன்களும் தற்போது மஹர சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மஹர சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பசுமைப் பொருளாதார வளர்ச்சி ஐரோப்பிய ஒன்றியம் மானியம்

கொழும்பு.ஜன.8

இலங்கையின் விவசாயத்துறையை பசுமைப் பொருளாதாரமாக மாற்றும் நோக்கிலான 'அக்ரி கிரீன்' எனும் திட்டத்துக்கான ஐரோப்பிய ஒன்றியத்துடன் 8 மில்லியன் யூரோ மானிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இறப்பர் துறையில் சூழல் ரீதியான விவசாய நடைமுறைகளை ஊக்குவித்தல், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு விசேட முன்னுரிமை அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், சந்தை சார்ந்த மதிப்புக் கூட்டல் மூலம் சர்வதேச ஏற்றுமதிச் சந்தைகளுடன் இலங்கையை ஒருங்கிணைத்தல் என்பன இதன் நோக்கங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**நாளை** வெள்ளிக்கிழமை - மார்கழி 25

09.01.2026

சுபநேரம் : 06.32 - 08.02

ராகுகாலம் : 11.02 - 12.32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## கன்னி

எங்கும் எப்போதும் புரட்சியுடன், புதுமையையும் புகுத்திப் பார்க்கும் நீங்கள் உழைப்பால் உயரும் உத்தமர்கள். மூளையையே மூலதனமாகக் கொண்டு முன்னேறுபவர்கள்.

உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் சந்திரன் இருக்கும்போது இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் மறைமுக எதிர்ப்புகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள். அலைபாய்ந்த மனது இனி அமைதியாகும். மனதில் இருந்து வந்த பயம் நீங்கும். கம்பீரமாக பேசுவீர்கள். பணப்புழக்கம் பல வகைகளில் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாகும். பங்காளிப் பிரச்சினைகள் ஓயும். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள். வெளிப்படையாக பேசுவதாக நினைத்து யாரையும் எடுத்தெறிந்து பேசாதீர்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 10ஆம் வீட்டில் நிற்பதால் எந்த வேலையும் இழுபறியாகி முடியும். அரச சம்பந்தப்பட்ட விஷயங்களில் கவனமாக இருங்கள். உங்களைப் பற்றிய விமர்சனங்களும், வதந்திகளும் பரவும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் இலாப ஸ்தானத்துக்குள் வருவதால் வராமலிருந்த பணம் தடையின்றி வரும். பொன், பொருள் சேரும். நவீன எலக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ் சாதனங்களை வாங்குவீர்கள்.

14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 12ஆம் வீட்டுக்குச் செல்வதால் குடும்பத்துடன் சுற்றுலா சென்றுவருவீர்கள். கையிருப்புக் கரையக் கூடும்.

5.2.2026 முதல் 1.3.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால் வாகனப்பழுது ஏற்படும். மறைமுக எதிர்ப்புகளும் இருக்கும். 11.5.2026 முதல் 20.6.2026 வரை 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைவதால், சிறு சிறு விபத்துகள், பொருள் இழப்புகள் ஏற்படும்.

இந்த வருடம் முழுவதும் கண்டகச்சனி தொடர்வதால் முன்கோபத்தைக் குறையுங்கள். திடீர் முடிவுகள் வேண்டாம். டிச. 4ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் கேது நிற்பதால் காரியத் தடைகள், விரயச் செலவுகள் வரக்கூடும். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திடவேண்டாம். 6ஆம் வீட்டில் ராகு நிற்பதால் வழக்கில் வெற்றியுண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். டிச.5ஆம் திகதி முதல் கேது 11ஆம் வீடான இலாப வீட்டுக்கு வருவதால் சொந்தமாக வீடு, மனை வாங்குவீர்கள். பழையக் கடன் தீரும். ராகு 5ஆம் வீட்டுக்கு வருவதால் சாதுர்யமான பேச்சால் தடைபட்ட வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். உடன் பிறந்தவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை பயக்கும்.

இல்லத்தரசிகளே! குடும்ப விஷயங்களை எல்லோரிடமும் சொல்லவேண்டாம். கன்னிப் பெண்களுக்கு தடைபட்ட கல்லூரிப்படிப்பைத் தொடரும் வாய்ப்பு உண்டு. மாணவ மாணவிகளுக்குத் தேர்வில் நல்ல மதிப்பெண் கிடைக்கும்.

வியாபாரத்தில் ஜூன் மாதத்திலிருந்து தள்ளிப்போன பெரிய நிறுவனங்களின் ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடன் இணக்கமாகச் செயற்படவும்.

உத்தியோகத்தில் மே மாதம் வரை வேலைச்சுமை இருக்கும். உங்களின் தகுதிக்கேற்ப சம்பளம் உயரும். மேலதிகாரி உங்களைப் புரிந்துகொள்வார். சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுங்கள். கணினித் துறையினருக்கு, இழந்த சலுகைகள் மீண்டும் கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். மூத்த கலைஞர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். வெற்றி கிட்டும்.

மொத்தத்தில் இந்த 2026ஆம் ஆண்டு, ஒரு பக்கம் சலசலப்புகளையும், சங்கடங்களையும் தந்தாலும் மறுபக்கம் சந்தோஷத்தையும் தருவதாக அமையும்.

**பரிகாரம்: பிள்ளையாரை அறுகம்புல் மாலை அணிவித்து வணங்குங்கள். அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.**

# ‘சீரற்ற வானிலை’ என்ற விளிப்பைத் தவிர்ப்போம்

“விசும்பின் துளிவீழின் அல்லான் மற்றாங்கே
பசும்புல் தலை காண்பதரிது”

இது வள்ளுவப்பெருமானின் வாய்மொழி. இக்குறளின் மூலம் மழையின் இன்றியமையாத தன்மை மிகஎளிதாகப் புலப்படுத்தப்படுகின்றது. மழையானது மூன்று வகையான இயற்கைக் காரணிகளால் பொழிவதாக புவியியல் துறை சுட்டிக்காட்டுகின்றது. அதாவது மேற்காவுகை மழை, பருவப்பெயர்ச்சிக் காற்றுகளினால் ஏற்படும் மழை, வளிமண்டலத் தளம்பல் நிலைத் தாழமுக்கம் முதலான காரணிகளால் ஏற்படும் மழை என விபரிக்கப்படுகின்றது.




மழை எமக்குக் கிடைக்கவேண்டுமெனில் மேற்சொன்ன காரணிகளில் ஒன்றாவது வளிமண்டல ஒழுங்கு நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தை தோற்றுவித்தே ஆக வேண்டும். வானம் எப்போதும் நீல மேகங்களின் விரிப்பின் மீது வெண் மேகங்கள் ஊர்வலம் வரும் சொர்க்கபுரியாகத்தோன்றினால் (பகல் வேளையில்) மழை கிடைக்க வாய்ப்பே இல்லை. நாங்கள் விரும்பும் ‘சீர்’ என்ற நிலையில் வானம் இருந்தால் எப்படி மழை பொழியும்? எனவே வானம் கருமேகங்கள் திரண்டு குளிர்ந்து, தென்றல் சற்று சீற்றமுற்று புயலாக மாறி, சீரற்ற நிலைக்கு மாறினால் தானே மழை பொழியும். அத்தகைய மழைக்கான சூழ்நிலையை நாம் ‘சீரற்ற வானிலை’ என விளித்து குற்றஞ்சாட்டுவது தகுமா?

நாம் ‘சீரற்ற வானிலை’ என விளித்து குற்றஞ்சாட்டுவதை விடுத்து ‘மழையுடன் கூடிய காலநிலை’ என மட்டும் அழைத்தால் நன்றாக இருக்குமல்லவா? புவியியல் மொழியியல் துறையினர் இது பற்றி சிந்திக்கவேண்டும்.

**ஆனையூர்க் கவிராயர்**

# திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் 22ஆவது திரைப்படக்காட்சி, எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு 18/2, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இலவசமாகக் காட்சிப்படுத்தப்படும். உலகத் திரைப்பட வரலாற்றில் ஒரு காவியமெனப் புகழ்பெற்ற மௌனத் திரைப்படமான ‘யுத்தக்கப்பல் பொட்டம்கின்’ என்ற திரைப்படமே அன்றைய தினம் காட்சிப்படுத்தப்படும். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்கள், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். உறவினர்கள்வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நான் கண்ணியமான மனிதன் என்னைக் கடத்தியது சட்டவிரோதம்"

## நியூயோர்க் நீதிமன்றத்தில் மதுரோ

**நியூயோர்க்,ஜன.8**

**நான் ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் அதிபர். சர்வதேச சட்டங்களை மீறி எனது இல்லத்திலேயே வைத்து சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டேன். என்னை ஒரு பயங்கரவாதியைப் போலவும் போதைப்பொருள் கடத்தல்காரனைப் போலவும் சித்திரிக்க அமெரிக்கா முயற்சிக்கிறது. ஆனால் நான் ஒரு கண்ணியமான மனிதன் என்று நிக்கோலஸ் மதுரோ நியூயோர்க் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.**

வெனிசுலா மீது திடீர்த் தாக்குதல் நடத்திய அமெரிக்கா, அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைச் சிறைப்பிடித்து அமெரிக்கா அழைத்து வந்தது.

அமெரிக்காவுக்கு சாதகமான அரசு அமையும் வரை அங்கு அமெரிக்க ராணுவம் தங்கியிருக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார். எனினும் வெனிசுலா உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் அந்நாட்டின் இடைக்கால அதிபராக பொறுப்பேற்றுள்ளார்.

இந்த நிலையில் நியூயோர்க் நீதிமன்றில் நிக்கோலஸ் மதுரோ மீதான விசாரணை நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது கடும் பாதுகாப்புக்கு மத்தியில் மதுரோவும் அவரது மனைவியும் நீதிமன்றம் அழைத்து வரப்பட்டு முற்படுத்தப்பட்டனர். இதன்போது அமெரிக்கா தனது அரசியல் இலாபத்துக்காகவும், வெனிசுலாவின் இயற்கை வளங்களைக் கைப்பற்றவும் என் மீது இத்தகைய பொய்யான குற்றச்சாட்டு களைச் சுமத்தியுள்ளது. தானே இன்னமும் வெனிசுலாவின் அதிபராக இருக்கிறேன் என மதுரோ நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

மேலும் மதுரோவின் மனைவி அட்ரியானாவும் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார். வழக்கின் விசாரணை மார்ச் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# பங்களாதேஷில் பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

டக்கா,ஜன.8

பங்களாதேஷில் பத்திரிக்கையாளர் ஒருவர் நேற்று மர்மநபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிளில் வந்த மர்மக்கும்பல் அவரின் தலையில் பலமுறை சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகொலை செய்யப்பட்டவர் 'பிடிகோபோர்' என்ற நாளிதழின் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். மேலும், அப்பகுதியில் பனிக்கட்டி தொழிற்சாலை ஒன்றையும் நடத்தி வந்துள்ளார்.

பங்களாதேஷில் பெப்ரவரி 12ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (ச)



# ரோபோவுக்கும் இனி வலிக்கும்!



வொஷிங்டன்,ஜன.8

மனிதர்களைப் போலவே ரோபோக்களும் வலி மற்றும் உணர்வுகளை உடனடியாக உணர்ந்து எதிர்வினை ஆற்றக்கூடியவகையில் செயற்கைத் தோலை உருவாக்கி ஹொங்காங் நகரப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அசத்தியுள்ளனர்.

'மின்னணுத் தோல் - Neuromorphic ESkin' என்ற தோல் மூலம் உணர்வுகளை உடனுக்குடன் ரோபோக்கள் கண்டறிந்து, தற்காத்துக் கொள்ளும் திறனைப் பெறுகின்றன. இந்தத் தொழில்நுட்பம் உலகில் ஒரு மிகப்பெரிய புரட்சியாகப் பார்க்கப்படுவதுடன் ரோபோக்களின் எதிர்காலத்தையே மாற்றப்போகிறது.

மின்னணுத் தோல் மிக மெல்லிய, நெகிழ்வான ஒரு படலம். இதில் ஆயிரக்கணக்கான நுண்ணிய சென்சார்கள் பொருத்தப்பட்டிருக்கும். மனித உடலில் உள்ள நரம்புகள் எப்படி மூளைக்குத் தகவல்களை அனுப்புகின்றனவோ, அதே போல இந்த சென்சார்கள் தொடுதல், அழுத்தம் மற்றும் வெப்பநிலையை ரோபோவின் கணினிக்கு அனுப்பும்.

ஒரு ரோபோ முட்டையை உடைக்காமல் தூக்குவதற்கும், அதேசமயம் ஒரு கனமான இரும்புத் தூணைத் தூக்குவதற்கும் எவ்வளவு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதை இந்த உணர்வுதான் தீர்மானிக்கும். சத்திர சிகிச்சை செய்யும் ரோபோக்கள், திசுக்களின் மென்மை மற்றும் அழுத்தத்தைத் துல்லியமாக உணர இது உதவும்.

முதியவர்கள் அல்லது நோயாளிகளைப் பராமரிக்கும் ரோபோக்கள், மனிதர்களைக் காயப்படுத்தாமல் மென்மையாகக் கையாள இந்தத் தொழில்நுட்பம் அவசியமாகும்.

இந்தத் தொழில்நுட்பம் முழுமையடையும்போது, ரோபோக்கள் வெறும் இயந்திரங்களாக இல்லாமல் மனிதர்களுக்கு இன்னும் நெருக்கமான, பாதுகாப்பான உதவியாளர்களாக மாறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ரஷ்யாவிடம் எண்ணெய் கொள்முதல்; இந்தியாவை மிரட்டும் அமெரிக்கா

வொஷிங்டன்,ஜன.8

இந்தியா ரஷ்யாவிடமிருந்து தொடர்ந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார். ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தாவிட்டால் இந்தியப் பொருள்கள் மீதான இறக்குமதி வரிகளை மேலும் அதிகரிக்கப் போவதாக அவர் மிரட்டல் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் மோடி ஒரு மிகச்சிறந்த மனிதர். நான் இந்த விவகாரத்தில் மகிழ்ச்சியாக இல்லை என்பது அவருக்குத் தெரியும். என்னை மகிழ்ச்சிப்படுத்துவது அவருக்கு முக்கியமானது.

இந்தியா எங்களுடன் வர்த்தகம் செய்கிறது. எனவே அவர்கள் மீது எங்களால் மிக விரைவாக வரிகளை உயர்த்தமுடியும். ரஷ்ய எண்ணெய் விவகாரத்தில் அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் இந்தியா மீது கூடுதல் வரிகளை விதிப்போம் - என்றார்.

அமெரிக்காவின் இந்தத் தொடர் வரி உயர்வு மிரட்டல்களால் இந்திய ஏற்றுமதியாளர்கள் பெரும் கவலையில் உள்ளனர். 2025 நவம்பர் நிலைவரப்படி இந்தியாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யாவின் பங்கு 35 சதவீதமாக உயர்ந்துள்ள நிலையில், ட்ரம்பின் இந்த அறிவிப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சில் பெரும் விரிசலை ஏற்படுத்தலாம் எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

# ஒத்துழைக்க மறுத்தால் மீண்டும் போர் வெடிக்கும்

*வெனிசுலாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை!*

நியூயோர்க்,ஜன.8

வெனிசுலாவில் எண்ணெய் தொழிலைத் தொடங்கு வதற்கும், போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கும் அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அந்நாட்டு அரசு முட்டுக்கட்டை போட்டால், மீண்டும் ஒருமுறை இராணுவத் தாக்குதலுக்கு உத்தரவிடத் தயங்கமாட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

வெனிசுலா அரசு அமெரிக்காவிற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அந்த நாடு கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

சிறைபிடிக்கப்பட்டுள்ள நிக்கோலஸ் மதுரோ மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும். அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டால் கொலம்பியா மற்றும் மெக்சிகோ நாடுகள் மீதும் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம் - என்றார்.

இதற்குப் பதிலளித்துள்ள வெனிசுலா இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ், வெனிசுலா தனது இயற்கை வளங்களைப் பாதுகாக்கும். இருப்பினும், அமெரிக்காவுடன் இணைந்து வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றத் தயாராக இருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையே கண்ணியமான உறவை ஏற்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி அரசினர் மருத்துவமனையின் வேண்டுகோளுக்கிணங்க தென்மராட்சி மட்டுவில் வில்சன் சனசமூக நிலைய உறுப்பினர்களும் மருத்துவமனை ஊழியர்களும் இணைந்து மருத்துவமனை வளாகத்தில் அண்மையில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

(ச-63)


# வேலையாட்கள் தேவை

## யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்திற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை

- உணவு பரிமாறுபவர் (இருபாலரும்)
- மரக்கறி வெட்டுபவர் (இருபாலரும்)
- ரொட்டி தயாரிப்பவர் (ஆண்)
- தேநீர் தயாரிப்பவர் (ஆண்)
- சமையல் உதவியாளர் (ஆண்)
- சமையலாள் (ஆண்)
- சிட்டை எழுதுனர் (ஆண்)
- களஞ்சியப் பொறுப்பாளர் (ஆண்)

தொடர்புகொள்ள :- 070 673 9611


# கரைதுறைப்பற்று பிரதேசசபை
## பொறியியலாளர்களை பதிவு செய்தல் - 2026

கரைதுறைப்பற்று பிரதேசசபை 2026 ஆம் ஆண்டில் விசேடமாக குறித்தொதுக்கப்படும் வேலைத்திட்டங்களிற்குரிய பொறியியல்சார் சேவைகளை வழங்க விரும்பும் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று குறுகிய பட்டியல் (Short List) தயார்செய்வதற்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எனவே ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் விடயங்களை கருத்திற்கொண்டு உரிய ஆவணங்களுடன் 22.01.2026 காலை 3.00 மணிக்கு முன்னஉ உரிய கட்டணத்தை செலுத்தி கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளலாம்.

- விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி - 08.01.2026 - 22.01.2026 வரை
- விண்ணப்பம் ஏற்கும் இறுதித் திகதி - 23.01.2026 பி.ப 3.00 மணிவரை
- சேவை வலுவிலிருக்கும் காலம் 01.02.2026 தொடக்கம் 31.12.2026 வரை
- படிவக்கட்டணம் - 1000.00
- பதிவுக்கட்டணம். - 2000.00 (தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மட்டும்)
- அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியலாளர் (குடிசார் எந்திரவியல்) பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- நிர்மாணத்துறையில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் பிணக்குகள் தீர்த்தல் தொடர்பில் அனுபவம் உடையவராக இருத்தல்.
- 60 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் தகுதி மற்றும் அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் ஐந்து (05) வழங்குநஉகள் தெரிவு செய்யப்படுவார்கள்.
- சபையால் தீர்மானிக்கப்படும் குழுவால் மேற்கொள்ளப்படும் முடிவே இறுதி முடிவாகும்.

மேலதிக விபரங்களை கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அலவலக தொலைபேசி தொடர்புகளுக்கு 021-2290001

**தவிசாளர்**
**கரைத்துறைப்பற்று பிரதேச சபை**
**முல்லைத்தீவு.**
**08.01.2026**

(CR 46649) E

# INVITATION FOR BID
## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE, JAFFNA. THUNUKKAI PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai, Mullaitivu** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Ministry of Public Administration, Provincial Council and Local Government.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
   - **Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Bidding Data & Contract Data (Section 5)** for SBD 1 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from **January 08. 2026** To **January 21. 2026** during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai, Mullaitivu. (T.P: 021 228 4532, Fax: 021 228 3478)** from 9:00 hrs to 15:00 hrs. During the period stated in table below.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai, Mullaitivu.** On or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai, Mullaitivu.** As stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From January 08, 2026 To January 21, 2025 |
| | Pre-Bid Conference | January 12, 2026 at 11:00 hrs |
| | Closing and Opening of Bids | January 22, 2026 at 14:00 hrs |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Re fundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| 2025/NP/C-2504/05/01 | Boosting Local Product Visibility and Local Economic Growth in Mallavi | 10.56 | 84 | C7 or above / Building | 3700.00 | 155,000.00 | May, 06.2026 | 77 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Vellankulam Road,**
**Thunukkai.**
**08.01.2026**

(CR 46851)A

# சாவகச்சேரியில் முடங்கிய
## இறைச்சி விற்பனை

*யாழ்ப்பாணம்,ஜன.8*

சாவகச்சேரி நகரசபையின் இறைச்சிக்கடைகளை இந்த வருடம் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வராமையால், தொடர்ச்சியாக அந்தக் கடைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மக்கள் இறைச்சிகளை வாங்குவதற்கு வேறு இடங்களுக்குச் செல்வதை அவதானிக்கமுடிகின்றது.

சாவகச்சேரி நகரசபையால் வருடாவருடம் இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடப்படும் நிலையில், இந்த வருடம் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுக்க எவரும் முன்வர வில்லை. இதனால் புதுவருடம் பிறந்து இதுவரையில் குறித்த இறைச்சிக் கடைகள் மூடப்பட்டுள்ளன. இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு விடுவது தொடர்பான கேள்வி கோரப்பட்ட போதும், எவரும் விண்ணப்பிக்கவில்லை. மீள் கேள்வி கோரப்பட்டபோதும், எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை என்று நகரசபையினர் தெரிவித்தனர்.

(க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாற்றுப்பால புனரமைப்பு நிறைவு விரைவில் போக்குவரத்து ஆரம்பம்!



**முல்லைத்தீவு, ஜன. 8**

**மழை, வெள்ளப்பெருக்குக் காரணமாக கடந்த நவம்பரில் உடைந்த முல்லைத்தீவு நாயாற்றுப்பாலம் திருத்தும் பணிகள் முடிவுறும் நிலையை எட்டியுள்ளன.**

கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நாயாற்றுப் பகுதியில் உள்ள இரண்டு பாலங்கள் வெள்ளத்தினால் சேதமடைந்தன.

இதன் காரணமாக கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மற்றும் வெலிஓயா போன்ற பகுதிகளுக்கான தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

போக்குவரத்துத் தடைப்பட்டிருந்த காலப்பகுதியில், அப்பகுதி மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்காக இலங்கைக் கடற்படையினர் படகுகளைப் பயன்படுத்தி மக்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில் இலங்கை இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன இணைந்து இந்த இரு பாலங்களையும் சீர்செய்யும் பணிகளை முன்னெடுத்த நிலையில் கடந்த மாதம் ஒரு பாலம் சீர்செய்யப்பட்டு தயார் நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

தற்போது எஞ்சியிருந்த இரண்டாவது பாலத்தின் கட்டுமானப் பணிகளும் முழுமையாக நிறைவுபெற்றுள்ளன. எனினும் இந்த வீதி ஊடாக வாகனப் போக்குவரத்தை அனுமதிப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை. நீண்ட நாள்களாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் தற்போது பாலத்தின் ஊடாக நடந்தே சென்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ச-19)

## உரும்பிராயில் சோதனை
# 18 குடியிருப்புகளில் நுளம்புக் குடம்பிகள்

யாழ்ப்பாணம்,ஜன.8

கோப்பாய் உரும்பிராய் பிரதேசத்தில் நுளம்புக் குடம்பிகள் அடையாளம் காணப்பட்ட 18 குடியிருப்பாளர்களுக்குத் தலா 9 ஆயிரம் ரூபா தண்டம் யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் ஒருமாத கால சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் உரும்பிராய் பிரதேசத்தில் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே.உதயபாலன் தலைமையிலான குழுவினர் அண்மையில் மேற்கொண்ட விசேட டெங்கு விழிப்புணர்வு சோதனை நடவடிக்கையின்போதே நுளம்பு குடம்பிகள் அடையாளம் காணப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. (ச-17)

# வெல்வேரிக் காணிகளை விரைவில் விடுவிப்போம்

## ஆளுங்கட்சி தெரிவிப்பு



திருமலை,ஜன.8

திருகோணமலை வெல்வேரிப் பகுதியில் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படும் என்று பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

வெல்வேரிக் கிராமத்துக்குக் களப்பயணம் மேற்கொண்டு, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பகுதி மக்கள் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்துள்ளனர். இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் போதியளவு காணப்படுகின்றன. விவசாயம் மேற்கொண்டதற்கான கிணறுகள், வயல் நிலங்கள்,எஞ்சிய கட்டுமானங்கள் போன்ற பல அடையாளங்களைக் கூறலாம். அத்துடன் மக்கள் ஆவணங்களையும் வைத்துள்ளனர்.

எனவே காணிகளை விரைவில் வன பரிபாலனத் திணைக்களத்திடமிருந்து விடுவித்து, மக்களிடம் கையளிப்போம். என்றார்.(க-50)



# யாழ்.போதனாவில் சத்துணவுச் சாலை

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்.போதனா மருத்துவமனையின் பெண்கள் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்தில் புதிய சத்துணவுச்சாலை கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சுகவாழ்வு நிலையத்துக்குச் சிகிச்சைக்காக வருகை தரும் பெண்கள், குடும்ப உறுப்பினர்கள் நிறையுணவு உட்கொள்ளும் அவசியத்தை உணர்ந்து கொள்ளும் வகையிலும், ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை மேம்படுத்தும் முகமாகவும் இந்தச் சாலை திறக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, மருத்துவ நிபுணர் சிவலிங்கராஜா ரகுராமன், மருத்துவ நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-66)

## தைப்பொங்கலை முன்னிட்டு
# வல்வையில் பட்டத் திருவிழா



யாழ்ப்பாணம்,ஜன.8

தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும் பட்டப்போட்டித் திருவிழாவும், இன்னிசை இரவும் வல்வெட்டித்துறையில் இந்த வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மதவடி, வல்வெட்டித்துறையில் உள்ள உதயசூரியன் உல்லாசக்கடற்கரையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பட்டப்போட்டித் திருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து தென்னிந்திய பிரபலங்கள் கலந்து சிறப்பிக்கும் சுருதிலயாவின் இசைத்திருவிழா இரவு இடம்பெறும். (க-100)

# மலையக மாணவர்களுக்கு உதவ யாழிலிருந்து புறப்பட்ட குழு

யாழ்ப்பாணம்,ஜன.8

டித்வா புயலால் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள மலையக மாணவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து விசேட குழுவொன்று மலையகம் நோக்கிப் புறப்பட்டுள்ளது. வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் செல்லும் இந்தக்குழுவினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரா ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொண்ட பின்னர் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.



ஆரம்ப நிகழ்வில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலை மாணவர்கள், வெண்கரம் அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் செயற்பாட்டுக்கு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணை அனுசரணை வழங்கியுள்ளது. வெண்கரம் அமைப்பின் மாணவர் குழுவினரால், தன்னார்வ ரீதியாகச் சேகரிக்கப்பட்ட நிதியில் இந்த உதவித்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (க-27)

# சமயப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.சைவ பரிபாலனசபையின் புண்ணிய நாச்சி அம்மையார் குருபூஜை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப்போட்டி, திருக்குறள் மனனப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடத்தப்படவுள்ளன.

திருக்குறள் மனனப்போட்டியில் கீழ்ப்பிரிவுக்கு முதல் 5 அதிகாரங்களும், மத்திய பிரிவுக்கு முதல் 10 அதிகாரங்களும், மேற்பிரிவுக்கு முதல் 15 அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்கலாம். மேலதிகத் தகவல்களுக்கு 0212227678 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளலாம் என்று சைவபரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டைத் தீக்கிரையாக்கியவர் மனைவி, மகளுடன் உயிரிழப்பு

## அநுராதபுரத்தில் பயங்கரம்

அநுராதபுரம்,ஜன.8
குடும்பத்தகராறு காரணமாக தந்தை வீட்டைத் தீக்கிரை யாக்கியதில், அவரோடு சேர்ந்து மனைவி மற்றும் மகள் என மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் படுகா யமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், கலென்பிதுனுவெவ பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கணவருக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட நீண் டகால முரண்பாடு காரணமாக மனைவி தனது மூன்று பிள்ளை களுடன் அநுராதபுரத்திலுள்ள தனது தாயார் வீட்டுக்குச் சென்று தங்கியிருந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை மனைவியின் தாயார் வீட்டுக்குச் சென்ற கணவன், வீட்டின்மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளார். இந்தக் கொடூரச் சம்பவத்தில் வீட்டைத் தீக்கிரையாக்கியவரும் அவரது 13 வயது மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் மருத்துவம னையில் சேர்க்கப்பட்ட மனைவி சிகிச்சைப் பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

தீயில் சிக்கி படுகாயமடைந்த சந்தேகநபரின் மாமியார், மூத்த மகள், மூத்த மகன் ஆகியோர் எரிகாயங்களு டன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

(ச-44)



உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையம் நடத்தும் மாணவ மன்ற கல்விநிலை யத்தின் மாணவர்கள் மற்றும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களுக் கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டன. சுவிஸ் நாவலடி நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-41-100)

# திருவாசக முற்றோதலும் மகேஸ்வரப் பூசையும்

யாழ்ப்பாணம்,ஜன.8
நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள் ளையார் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கி ழமை காலை 6.15 மணி தொடக்கம் நண் பகல் 12 மணிவரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

அத்துடன் 2025ஆம் ஆண்டு ஆலய மஹோற்சவ காலத்தில் இடம்பெற்ற தெய்வீகக் கலைநிகழ்வில் பங்கு கொண்ட மாணVவர்களுக்கும் அவர் களை நெறிப்படுத்திய ஆசியர்களுக்கு மான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற வுள்ளது.

நிகழ்வின் இறுதியில் மகேஸ்வர பூசை இடம்பெற்று அன்னதானமும் வழங்கப் படவுள்ளது. (ச-இ)

# இலவச நீரிழிவுபரிசோதனை!

யாழ்ப்பாணம்,ஜன.8
யாழ். நீரிழிவுக்கழகம் நடத்தும் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் கல்வியங்காட்டு சந்தை எம்.ஜி.ஆர். சிலைக்கு அருகில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது. இதில் நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல்திணிவுச்சுட்டி, மருத்துவ ஆலோசனை கள் இடம்பெறும். சகலரும் கலந்து பயன்பெறுமாறு நீரிழிவுக்கழ கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச)

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி மார்த்தா ஜோசப் தி.கு

ஷங்காய், சீனாவைப் பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மார்த்தா ஜோசப் தி.கு (06.01.2026) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 08.01.2026 அன்று வியாழக் கிழமை பி.ப 03.00 மணிக்கு "யூலாலி இல்லம்", பாசையூர் திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


**தகவல்:**
**அருட்சகோதரி ஜொய்லின்றாஜி ஸ்ரான்லி**
**மாகாணத் தலைவி.**
**121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/31212) ER

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 09 . 1932

இறப்பு 07 . 01 . 2026



### கதிரமலை ஐயா இராமலிங்க ஐயா

**(கொடிகாமம் - சந்தைவாயில் காளி கோவில் தேவஸ்தான பிரதம குரு)**

புலோலியைப் பிறப்பிடமாகவும் சரசாலை மற்றும் கொடிகாமத்தினை வசிப்பிட மாகவும் கொண்ட கதிரமலை ஐயா இராமலிங்க ஐயா நேற்று (07.01.2026) புதன்கிழமை அன்று சிவ ஐக்கியம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரமலை ஐயா, பறுவதம் ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையாக் குருக்கள், இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், மனோரஞ்சித சிகாமணியின் அன்புச் சகோதரனும், ஸ்ரீதரக் குருக்கள் (மனோ ஐயா) ஸ்ரீரங்கக் குருக்கள் (சிவா ஐயா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சினி அம்மா மற்றும் சுகந்தினி அம்மா ஆகியோரின் மாமனும், அகிலா (பிரான்ஸ்), ரதீபன் (பிரான்ஸ்), அகில்றாஜ் (பிரதேச சபை கொடிகாமம்), வினுஜா, அக்ஷயராம், அனீஸ்வராம் ஆகியோரின் பேரனும் ஆருத்ராவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று வியாழக்கிழமை 08.01.2026 அன்று அவரது இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெற்று கொடிகாமம் கட்டைபறித்தான் இந்து மயானத்தில் சமாதி வைக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். நன்றி.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 92[illegible] (சிவா ஐயா)**
**077 175[illegible] (மனோ ஐயா)**

(CK/36852) ER

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 04 . 1948

இறப்பு 07 . 01 . 2026



### போல் ராஜேஸ்வரி

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் France ஐ வசிப்பிமாகவும், தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான போல் ராஜேஸ்வரி நேற்று (07.01.2026) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கரத்தினம் அவர்களின் அன்பு மகளும், பீற்றர் அன்னம்மாவின் மருமகளும், பீற்றர் போலின் பாசமிகு மனைவியும், ஜேம்ஸ் (CWE), துரைரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), ஞானேந்திரம் (இளைப்பாறிய மருந்தாளர்), றூபி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சந்திரன், காலஞ்சென்ற மனோகரன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவமணி, லலிதா, செல்வராசா காலஞ்சென்ற மன்மதராணி, வசந்தி அவர்களின் அன்பு மைத்துணியும், ஜெயக்குமார் (France), தனுஷா (France) அவர்களின் பாசமிகு தாயாரும், ஜெறி (France) அவர்களின் அன்பு மாமியாரும், சாரா (France), திமெத்தியு (France) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (08.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பரியோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**89, [illegible] வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 31215) ER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றமுத்தத் தாழ்வுநிலை நாட்டின் கிழக்குக் கடற்கரையை நோக்கி நகர்ந்து வருகின்றது. இது மணிக்கு 9 கிலோமீற்றர் வேகத்திலேயே நகரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜனவரி மாதத்தில் உருவாகியுள்ள 21ஆவது தாழ்வு மண்டலமாக இது அமைகின்றது. கடந்து சென்ற தாழ்வு மண்டலங்களை விட இது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். இதன் நகர்வுப் பாதை கடற்பகுதியாகவிருந்தாலும் வடக்கு நோக்கி நகரும்போது தரையையும் ஊடறுத்துச் செல்லவுள்ளது. அத்துடன் மிகக் குறைந்தளவு வேகத்தில் நகர்வதால் எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணம் பெரியளவு மழைவீழ்ச்சியை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.
தற்போது உருவாகியுள்ள புதிய காற்றமுத்தத் தாழ்வு மண்டலத்தால் யாழ். மாவட்டத்தில்650 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியமுள்ளது. இதன் தாக்கத்தால் யாழ். மாவட்டம் இதுவரை எதிர்கொள்ளாத அளவுக்கு அதிக பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக 9ஆம், 10ஆம் திகதிகளில் யாழ். மாவட்டம் மிக அதிக மழைவீழ்ச்சியை எதிர்கொள்ளவுள்ளது. இதன் தாக்கம் டித்வா புயலால் தென்பகுதி எதிர்கொண்ட பேரழிவுகளை விட அதிகமாக இருக்கும்.
துறைசார் அதிகாரிகள் இதுதொடர்பாகத் துரித முன்னேற்பாடுகளை முன்னெடுப்பது சிறந்தது. அத்துடன், பொதுமக்களும் இந்த விழிப்புணர்வு எச்சரிக்கையை அவதானத்தில் கொண்டு தங்களது பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம் - என்றார். (அ-ம-66)

## ஈஸ்டர்...

பினர் முஜிபுர் ரஹ்மான்பல்வேறு கேள்விகளை வினவினார். இதன்போதே, ஈஸ்டர் தாக்குதல்தாரிகளில் ஒருவரான சாரா (புலஸ்தினி) உயிருடன் உள்ளார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று அமைச்சர் ஆனந்த விஜேபால கூறினார்.
சாரா உயிருடன் உள்ளார் எனக் கிடைத்த தகவல்களுக்கு அமைய நாங்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றோம். விசாரணைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தேவை ஏற்படின் சாராவைக் கைது செய்வது தொடர்பில்திறந்த பிடியாணை பிறப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.
உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் சூழ்ச்சி உள்ளதா என்பது பற்றியும் விசாரிக்கப்படுகின்றது. தற்போது சில தகவல்களை வெளியிட்டால், அது விசாரணைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அந்தத் தகவல்களை வெளியிட முடியாத நிலை உள்ளது என அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

## ஜனாதிபதி...

வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.
சேர்.பொன்.அருணாசலம்நிதியத்துடன் இணைந்து, கொழும்பு வடக்கு சைவ பரிபாலன சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.சேர்.பொன்.அருணாசலம், பிரித்தானியர்களால் இலங்கை அரச பணிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமைக்குரியவர். 1919ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸின் முதல் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர். பொன்.அருணாசலம், தமிழர் - சிங்களவர் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டார்.
இலங்கைக்கெனத் தனிப் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, 'இலங்கை பல்கலைக்கழகச் சங்கம்' உருவாகக் காரணமாக இருந்ததனால் இவர் 'இலங்கை பல்கலைக்கழகக் கல்வியின் தந்தை' எனப் புகழப்படுகிறார்.
நீதிபதி, மாவட்டச் செயலர் எனப் பல்வேறு அரச பதவிகளை அலங்கரித்த சேர்.பொன்.அருணாசலம், தலைமைப் பதிவாளர் நாயகமாகப் பணியாற்றிய காலப்பகுதியில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் இன்றும் பேசப்படுகின்றன. 1901ஆம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை இவரது மிகச்சிறந்த செயற்பாடாக அமைந்தது. இது இலங்கையின் சமூக, பொருளாதார நிலையைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டியது. இவரது சேவையைப் பாராட்டி பிரித்தானிய அரசு 1913ஆம் ஆண்டு 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## புயலுக்கு...

மண்டலம் அதிகளவான காற்றுச் சுழற்சியை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே இது அடுத்தகட்ட தீவிரத்தை அடையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ம-26)

## வாகனங்களின்...

மாவட்ட மோட்டார் திணைக்கள பிரதான பரீட்சையாளர் தலைமையில், வவுனியா நெளுக்குளம் பொலிஸார் மற்றும் மாவட்ட போக்குவரத்து பொலிஸாரால் இந்த திடீர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அரச மற்றும் தனியார் பேருந்துகள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் ஆபத்தான வகையில் மேலதிக பாகங்கள் பொருத்தியமை, தேய்வடைந்த ரயர்களை மாற்றாதமை, மின் விளக்கு வேலை செய்யாமை, அதிக ஒலி எழுப்பும் கருவிகளைப் பொருத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்காக பத்துக்கும் மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ-ம-110)

## பிரதமர்...

மைப்பையும், பாட அலகுகளையும் மறுசீரமைக்கும் நடவடிக்கையில், பிரதமர் ஹரிணி அண்மைக்காலமாக ஈடுபட்டு வருகின்றார். இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே, பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேற்றுக் கையொப்பம் இட்டுள்ளார். இதையடுத்து, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது. அதை சபாநாயகருக்கு சான்றுப்படுத்தும் நகர்வு விரைவில் முன்னெடுக்கப்படும் என்று தெரிய வருகின்றது.
பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் பிரேரணையின் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் நேற்று ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளன. எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## 25 வீதமான...

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தால் நேற்று டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது, 223 ஆதனங்கள் பரிசோதிக்கப்பட்டதில் 55 இடங்கள் டெங்கிற்கு ஏதுவான சூழலுடன் இருந்துள்ளன. இதையடுத்து, அந்த ஆதனங்களுடன் தொடர்புடையவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
அத்துடன் ஐந்து பேருக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன், மூவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## ஓய்வூதியத்தை...

ரிய சட்டவரைவு' எனப் பெயரிடப்பட்டுள்ள அதை, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சபையில் முன்வைத்தார்.
இந்தச் சட்டவரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நாடாளுமன்றத்தில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் உயர்நீதிமன்றத்தை நாடுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படும். அதன் பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் ரத்தாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## சீன...

தருவது அண்மைய நாள்களாக அதிகரித்து வருகின்றது. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்திருந்தார். இதன் தொடர்ச்சியாகவே, தற்போது சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இலங்கைக்கு வரவுள்ளார் என்று கூறப்படுகின்றது. எதிர்வரும் 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் அவர் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளார். இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மற்றும் அரசின் கொள்கை வகுப்பாளர் ரில்வின் சில்வா ஆகியோருடன் சீன வெளிவிவகார அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.
சீன முதலீடுகள், புதிய பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்கள் மற்றும் இலங்கை சீன சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் முன்னேற்றம் ஆகியன குறித்தும் சீன வெளிவிவகார அமைச்சர் கவனம் செலுத்துவார் என்றும் துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-ம-44)

## ஜனவரி...

கத் தூதுவராக நியமிக்கப்பட்ட ஜூலி சங், கடந்த நான்கு ஆண்டுகளாக பல்வேறு முக்கியமான தருணங்களில் இலங்கையில் பணியாற்றியுள்ளார். சீனா, ஜப்பான், வியட்நாம், கம்போடியா ஆகிய ஆசிய நாடுகளில் பணியாற்றிய ஜூலி சங், ஆசிய மற்றும் தெற்காசிய விவகாரங்களில் தவிர்க்க முடியாத ஆளுமையாக திகழ்கின்றார்.
இவ்வாறான நிலையில், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் உத்தரவுக்கு அமைய, இலங்கையில் தனது பணிகளை நிறைவுசெய்து எதிர்வரும் வாரமளவில் புறப்படவுள்ளார். இதையடுத்து, புதிய தூதுவர் நியமிக்கப்படும் வரை, துணைத்தூதுவர் ஜேன் ஹோவல் பதில் தூதுவராகச் செயற்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.
இலங்கையில் பணியாற்றிய நாள்கள் மிகவும் அற்புதமானவை என ஜூலி சங் தனது பிரியாவிடை உரையில் தெரிவித்துள்ளார். 'இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகத்தை விரிவுபடுத்துவதிலும், நட்புறவைக் கட்டமைப்பதிலும் எனது காலத்தில் மிகவும் அர்ப்பணிப்பாகச் செயற்பட்டேன்' என்றும் ஜூலி சங் மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் எண்ணெய்க் கப்பலை சிறைப்பிடித்தது அமெரிக்கா

## போர்ப் பதற்றம் அதியுச்சம்



வொஷிங்டன், ஜன. 8
ரஷ்யக் கொடியுடன் பயணித்த கப்பலொன்றை அமெரிக்கா நேற்று சிறைப்பிடித்த நிலையில், இரண்டு நாடுகளுக்கும் இடையில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வெனிசுலா மற்றும் ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் கொண்டு செல்வதற்கு அமெரிக்கா சர்வதேசத் தடைகளை விதித்துள்ளது. இந்தத் தடைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காக, தற்போது விசேட கடற் கண்காணிப்பையும் நடத்தி வருகின்றது. இவ்வாறான பின்னணியில், ரஷ்யக் கொடியுடன் பயணித்த எண்ணெய் கப்பலொன்றை அமெரிக்கா நேற்று சிறைப்பிடித்துள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தக் கப்பலை கடந்த இரண்டு தினங்களாக அமெரிக்கா நெருக்கமாகப் பின்தொடர்ந்தது. இதனால், எண்ணெய்க் கப்பலின் பாதுகாப்புக்காக, ரஷ்யாவின் கடற்படைக் கப்பல்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன. இந்த இடைப்பட்ட நேரத்திலேயே, அந்தக் கப்பலை அமெரிக்க சிறைப்பிடித்து தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு சென்றுள்ளது.

சிறைப்பிடிக்கப்பட்ட கப்பலை உடனடியாக விடுவிக்குமாறு ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அமெரிக்காவை எச்சரித்துள்ளது. கப்பலை விடுவிக்காவிடில் போரொன்று ஏற்படுவது தவிர்க்க முடியாததாக அமையும் என்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியுள்ளது. (ம)

# ஈரானைத் தாக்குவதற்கு அமெரிக்கா தயார்நிலை

வொஷிங்டன், ஜன. 8
ஈரானைத் தாக்குவதற்கு அமெரிக்கா தயாராகி வருகின்றது என்றும், அதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டனின் விமானத் தளங்களில் அமெரிக்காவின் இருபதுக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் கடந்த இரண்டு நாள்களில் தரையிறங்கியுள்ளன. ஈரானுக்கு எதிராக கடந்த வருடம் மத்திய பகுதியில் தாக்குதல் நடத்திய போதிலும், பிரிட்டனின் விமானத் தளங்கள் இதே போல் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டன.

இதையடுத்தே, அமெரிக்காவின் தற்போதைய நகர்வை வைத்து, அந்த நாடு ஈரானைத் தாக்கத் தயாராகி வருகின்றது என்று சர்வதேச போரியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஈரானின் உயர் தலைவர் அயதுல்லாவைக் கொல்வதே இம்முறை பிரதான திட்டமாக இருக்கலாம் என்றும் அவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனை மையப்படுத்தி அமெரிக்கா மேற்கொள்ளும் நகர்வுளை நுணுக்கமாகக் கண்காணித்து வருவதாக ஈரானிய இராணுவம் அறிவித்துள்ளது. எதிரிப் படை எதுவாக இருந்தாலும், பதிலடி கொடுப்பதற்குத் தயார் என்றும் ஈரான் இராணுவம் கூறியுள்ளது. (ம)

# வெளிநாட்டுப் பல்கலைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இலங்கைப் பல்கலைக்கழகங்களை சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துவதற்காக, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்- தாய்லாந்து மஹாமகுட் பௌத்த பல்கலைக்கழகம் என்பன இணைந்து கல்வி மற்றும் கலாச்சாரப் பரிமாற்றம், இணைந்த ஆய்வுகள் மற்றும் மாநாடுகளை நடத்துதல். இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - இந்தோனேசிய நாலந்தா நிறுவனம் இணைந்து விரிவுரையாளர்களின் நிபுணத்துவத்தைப் பகிர்தல், நூலகம் மற்றும் ஆய்வுகூட வசதிகளைப் பயன்படுத்துதல், மனித வள அபிவிருத்தி. கொழும்பு பல்கலைக்கழகம் - போலந்து வோர்சோ பொருளியல் கல்லூரி இணைந்து ஒருங்கிணைந்த பொருளாதார ஆய்வுகள், கல்வி வெளியீடுகள் மற்றும் மாணவர்/ஆசிரியர் பரிமாற்றுத் திட்டங் களை பகிர்தல் என்பன தொடர்பில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் ஐந்து ஆண்டு காலப் பகுதிக்குச் செல்லுபடியாகும்வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன(ச-இ)

**விற்பனைக்கு**
பொங்கல் அகப்பை (சிரட்டை) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 210 5286
(CS/60398) J-1

**வேலையாட்கள் தேவை**
இல.194, யாழ்வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள மிக்சர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதியிடுவதற்கு பெண்கள் தேவை.
மேலதிக விபரங்களுக்கு:-
076 640 3388
(CS/60404) J-1

**காணி விற்பனைக்கு**
யாழ் சிற்றி பாம், 755 மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் எனும் இடத்தில் மானிப்பாய் வீதியோரமாக சுற்று மதிலுடன் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. 1 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 075 944 4601

**SALES PROFESSIONALS**
**VASCORA (PVT) LIMITED**

Vascora (PVT) Limited is seeking experienced Sales Professionals to join our growing team in the Northern Province of Sri Lanka.

1. **Accountant**
2. **Regional Sales Manager**
3. **Sales Representative**

Work Locations – Northern Province
- Jaffna ● Kilinochchi
- Mannar ● Mullaitivu ● Vavuniya

Products Portfolio:
✔ Premium Ceylon Tea (150 Years of Tea Heritage)
✔ Coconut Oil ✔ Coconut Milk Powder
✔ Biscuits / Cookies / Chocolates

What We Offer:
✔ Very competitive base salary ✔ Meal allowance
✔ Vehicle allowance ✔ Attractive sales incentives
✔ Year-end performance bonus

**INTERVIEW DETAILS:**
Date: 09th and 10th January 2026 (Friday and Saturday)
Location: Jaffna Town

If you are a driven sales professional with market knowledge in the Northern Province and a passion for premium FMCG products, we invite you to attend the interview.

**பணியமர்த்தல் அழைப்பு**
**VASCORA (PVT) LIMITED**

Vascora (PVT) Limited நிறுவனம், இலங்கையின் வட மாகாணத்தில் தனது வளர்ந்துவரும் அணியில் இணைவதற்காக அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகளை அழைக்கின்றோம்.

1. **கணக்காளர்**
2. **பிராந்திய விற்பனை முகாமையாளர்**
3. **விற்பனை பிரதிநிதி**

**பணியிடம்** - வட மாகாணம்:
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● மன்னார் ● முல்லைத்தீவு ● வவுனியா

**எமது தயாரிப்பு பொருட்கள்**
✔ உயர்தர சிலோன் தேயிலை (150 ஆண்டுகளின் தேயிலை பாரம்பரியம்)
✔ தேங்காய் எண்ணெய்
✔ தேங்காய் பால் மா
✔ பிஸ்கட், குக்கீஸ் மற்றும் இனிப்புப் பொருட்கள்

**நாங்கள் வழங்கும் மேலதிக கொடுப்பனவுகள்**
✔ மிகப் போட்டித்தன்மை கொண்ட அடிப்படை சம்பளம்
✔ உணவு செலவுத்தொகை
✔ வாகன செலவுத்தொகை
✔ கவர்ச்சிகரமான விற்பனை ஊக்கத்தொகைகள்
✔ ஆண்டு இறுதி செயல்திறன் போனஸ்

**நேர்முகத் தேர்வு**
**ஜனவரி 9 மற்றும் 10 (வெள்ளி, சனிக்கிழமை)**
**இடம்: யாழ். நகரம்**

வட மாகாணத்தில் சந்தைப்படுத்துதலில் நிபுணத்துவமும் உயர்தர FMCG தயாரிப்புகளின் மீது ஆர்வமும் கொண்ட முனைப்பான விற்பனை பிரதிநிதிகளாக நீங்கள் இருந்தால், நேர்முகத் தேர்வில் பங்கேற்க அழைக்கிறோம்.

Contact: 076 918 0854
Mr.kajenselva@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.